




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 38.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை நேற்று முன்தினம் (16.4.2025) திறந்து வைத்து 9 நபர்களுக்கு புரவலர் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்தர மோகன், பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘ஹஜ்’ புனிதப் பயண விவகாரம்

# சவூதி அரேபிய அரசிடம் தொடர்பு கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஏப்.18 -**

**2025ஆம் ஆண்டு ஹஜ் புனிதப் பயணத்திற்கான பயணிகளை பாதிக்கும் வகையில் தனியார் ஹஜ் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில் சவூதி அரேபிய அரசிடம் தொடர்பு கொண்டு தீர்வு காண வலியுறுத்தியுள்ளார்.**

அக்கடிதத்தில், வரவிருக்கும் 2025 ஹஜ் புனிதப் பயணத்திற்கு ஆவலுடன் தயாராகி வரும் தமிழகம் உட்பட ஆயிரக்கணக்கான இந்திய முஸ்லிம்கள் மத்தியில் தனியார் ஹஜ் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்த செய்தி மிகுந்த வருத்தத்தை உண்டாக்கி உள்ளது என்றும் இந்த அவசர மற்றும் கவலையளிக்கும் விஷயத்தை பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்தக் கடிதத்தை எழுதுவதாகவும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்து கடமைகளாகக் கருதப்படும் தூண்களில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இது முஸ்லிம்களுக்கு மிகவும் புனிதமான மற்றும் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளும் மதக் கடமையாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பினை செலவு செய்கிறார்கள் என்றும், இந்த ஆண்டு, ஹஜ் பயணம் 4.6.2025 முதல் 9.6.2025 வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவிலிருந்து பயணிகள் வழக்கமாக 2025 மே மாதத்தில் சவுதி அரேபியாவுக்கு தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டில், சுமார் 1,75,000 இந்திய ஹஜ் பயணிகள் புனிதப் பயணத்தில் பங்கேற்றதாகவும், இதற்காக ஜனவரி 2025இல், இந்தியா சவுதி அரேபியாவுடன் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, 1,75,025 ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீட்டை இறுதி செய்தது என்றும், இந்த ஒதுக்கீடு 70:30 என்ற விகிதத்தில் மாநில ஹஜ் கமிட்டிகள் மற்றும் தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களிடையே பிரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, 2025ஆம் ஆண்டுக்கான மாநில ஹஜ் குழுக்களுக்கு 1,22,517 இடங்களும், தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு 52,507 இடங்களும் ஒதுக்கப்பட்ட நிலையில் சவுதி அரேபியா திடீரென இந்தியாவுக்கான ஹஜ் ஒதுக்கீட்டை குறைத்துள்ளதாகத் தாம் அறிய வந்துள்ளதாகவும், அதன் காரணமாக தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 52,000 ஹஜ் இடங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த திடீர் முடிவு ஏற்கனவே பணம் செலுத்தியுள்ள பல ஹஜ் பயணிகளை ஆழ்ந்த கவலையிலும் நிச்சயமற்ற நிலையிலும் ஆழ்த்தியுள்ளது என்று தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையின் தன்மையைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சனையை அவசரமாக சவூதி அரேபிய அரசிடம் எடுத்துச்சென்று விரைவான தீர்வினைப் பெற வேண்டும் என்றும், பிரதமரின் தலையீடு, ஹஜ் ஒதுக்கீட்டில் முந்தைய அளவினை மீண்டும் கொண்டுவந்து, ஹஜ் பயணிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதியை அளிக்கும் என்றும் தாம் உறுதியாக நம்புவதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

